# Ontario Works இற்கு எவ்வாறு விண்ணப்பிப்பது?

உணவு மற்றும் தங்குமிடத்திற்கான போதுமான பணம் உங்களிடம் இல்லாவிட்டால் மற்றும் நிதித் தேவை இருந்தால், நீங்கள் Ontario Works உதவித் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

## இணையத்தில் விண்ணப்பித்தல்

- ✔ 24/7கிடைக்கும்
- ✔ கைத்தொலைபேசி-பயன்படுத்தலாம்

உங்களது விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு 20 முதல் 30 நிமிடங்கள் எடுக்கும், மற்றும் இணையத்தில் விண்ணப்பிப்பதற்கு உங்களிடம் ஒரு மின்னஞ்சல் முகவர் இருக்க வேண்டும்.

ஆரம்பிப்பதற்கு, **ontario.ca/SocialAssistance** க்குச் செல்லவும்

## தொலைபேசி மூலம் விண்ணப்பித்தல்

- ✔ விடுமுறைகள் தவிர, திங்கள் முதல் வெள்ளி வரை, மு.ப. 8:30 முதல் பி.ப. 5 மணி வரை கிடைக்கும்

ஆரம்பிப்பதற்கு, மாகாணத்தின் சமூக உதவித் தொடர்பாடல் மையத்தை **1-888-999-1142 / TTY: 1-800-387-5559** இல் அழைக்கவும்.

## நீங்கள் விண்ணப்பிப்பதற்கு முன்பு

சம்மதத்தை வழங்கவும், கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் மற்றும் அவர்களது தகவலை உறுதிப்படுத்தவும், தயவுசெய்து **உங்களது விண்ணப்பத்தில் உள்ளடக்கப்படும் அனைத்துக் குடும்ப உறுப்பினர்களையும் உங்களுடன் வைத்திருக்கவும்.**

## தேவையான ஆவணங்கள்

விண்ணப்பதாரர்கள் அனைத்துக் குடும்ப உறுப்பினர்களுக்கும் அடையாளம், வரி மற்றும் நிதி தொடர்பான ஆவணங்களைத் தயாராக வைத்திருக்க வேண்டும், அவை:

- ✔ சமூகக் காப்புறுதி இலக்கம் (SIN)
- ✔ OHIP அட்டை (ஒன்ராறியோ சுகாதார அட்டை)
- ✔ பிறப்புச் சான்றிதழ்
- ✔ குடிவரவுப் பத்திரங்கள்
- ✔ வருமானவரி ஆவணங்கள்
- ✔ வங்கித் தகவல்
- ✔ குத்தகை அல்லது வாடகை ஒப்பந்தம்
- ✔ வருமானத்தின் கடைசி ஆதாரம்

---

## நாங்கள் உதவுவதற்கு இங்கே இருக்கிறோம்

- > நீங்கள் ஆங்கிலம் அல்லது பிரெஞ்ச் பேசாவிட்டால் மற்றும் உங்களது சொந்த மொழிபெயர்ப்பாளரை வழங்க முடியாவிட்டால், உங்களது விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு மொழிபெயர்ப்புச் சேவைகள் கிடைக்கும்.
- > இணையத்தில் உங்களது விண்ணப்பத்தின் நிலையைச் சரிபார்க்கலாம்: **sada.mcss.gov.on.ca/applicationstatuschecker** சில விண்ணப்பங்களுக்கு இந்தச் சேவை கிடைக்காது என்பதைத் தயவுசெய்து நினைவில் கொள்ளவும்.
- > எமது திட்டங்கள் மற்றும் சேவைகள் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு **toronto.ca/humanservices** க்குச் செல்லவும் ரொறன்ரோவின் நகர இணையத்தளம் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்படக்கூடியது. 180க்கும் மேற்பட்ட மொழிகளில் நகர சேவைகள் தொடர்பான தகவலைப் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் 311ஐ அழைக்கவும் முடியும்.

TORONTO

Tamil